திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் அனுமதி வழங்கினாலும் வங்கிகள் சரியாகக் கடன் கொடுப்பதற்கு இயலாத நிலைமை இருக்கிறது. வங்கிகள் உடனடியாகக் கடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் வங்கியை அணுகி அவர்களுக்குக் கடன் கொடுக்குமாறுதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் வங்கிகள் கொடுக்க மறுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். நாங்கள் எப்படி அணுகி அவர்களுக்குக் கடன் வாங்கிக் கொடுத்து அதன் மூலம் அவர்கள் ஆடுகளை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்க முடியுமோ அதையெல்லாம் செய்து வருகிறோம். எங்கெங்கு வங்கிகள் கொடுக்க மறுக்கிறார்களோ, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தார்களானால் அதைப்பற்றி அந்த வங்கியரை அணுகி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை நகரில் வேலைக்குச் செல்லும் குடிசைவாசிகளின் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு இல்லங்கள்.

*வினா எண் 584—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலைக்குச் செல்லும் குடிசைவாசிகளின் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு இல்லங்கள் சென்னை நகரில் எத்தனை இடங்களில் உள்ளன ?

(ஆ) அவைகளில் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) வேலைக்குச் செல்லும் குடிசைவாசிகளின் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு இல்லங்கள் சென்னை நகரில் சமுகநலத் துறையின் கீழ் 239 இடங்களில் உள்ளன.

(ஆ) அவைகளில் மதிய உணவு, விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்பட்டு மற்றும் நோய்த் தடுப்பு ஊசி போடுதல் உள்ளிட்ட மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்படுகின்றன.

1982 மார்ச் 20]

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே, சென்னை நகரைத் தவிர வேறு எந்தெந்த நகரங்களில் இதுபோன்ற பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? கிராமப் புறங்களில் இதுபோன்ற பாதுகாப்பு இல்லங்களை அமைப்பதற்கான எண்ணமும் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகரம் தவிர எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். நகரங்களிலும் கிராமங்களிலும் இப்பொழுது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்கள் சென்னையைச் சுற்றியுள்ள ஸ்லம் ஏரியாக்களிலே அமைக்கப்பட்டுள்ளதா? காரணம், அங்கேயுள்ள தாய்மார்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் இந்த ஸ்லம் ஏரியாக்களில் இல்லை என்றால் இனியாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்லம் பகுதிகளிலும் குழந்தைகள் காப்பகத்தை நடத்தி வருகின்றோம்.

''மெரினா'' கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 582.—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. இல. பலராமன், திரு. கு. முத்துகிருஷ்ணன் மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : ஒரு விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் பற்றிய விவர அறிக்கையில் எவ்வளவு மதிப்பீட்டில் இந்தத் திட்டம் வருகிறது என்ற குறிப்பு இல்லை. ஆதலால் எவ்வளவு தொகையில் அந்த மெரினா கடற்கரை அழகுபடுத்தப்

@ 136-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.